இந்த நடப்பாண்டிலேயே—நீங்கள் இருப்பீர்கள்—ஆகையினாலே (சிரிப்பு) அந்தச் சிறைச்சாலையை அமைப்பதற்கான ஒரு நடவடிக்கையை எடுக்க முடியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள் இந்த ஆண்டு சிறைக்குச் போக மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அவருடைய வசதியைக் கருத்திலே கொண்டு—அப்படிப் போவதாக அறிவிப்பார்களேயானால், அதை மனதிலே கொண்டு நடவடிக்கை எடுக்கலாம். அப்படி ஒன்றும் அவர்கள் போக மாட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வராது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வராது; வரக்கூடாது என்று கூட நான் நினைக்கிறேன். ஆனால் உறுப்பினருடைய கருத்தின் அடிப்படையில், திண்டுக்கல்லில் ஒரு மாவட்டச் சிறைச்சாலை அமைப்பதற்கான குறிப்பைப் பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்ததைப் போன்று திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தில் மத்திய சிறைச்சாலையை ஏற்படுத்துவதற்கு இப்பொழுது அரசின் நடவடிக்கையில் இல்லாமல் போனாலும், ஏற்கனவே இருந்து வரும்படியான கிளைச் சிறைச்சாலை மோசமான நிலையில் இருப்பதாலும், சிறிய பகுதியாக இருப்பதாலும், அதை விரிவு படுத்திக் கட்டுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, மத்திய சிறைச்சாலை அமைப்பதற்கான குறிப்பு ஆராயப்படும்பொழுது மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன கருத்தையும் கருத்திலே கொண்டு, கிளைச் சிறையை விரிவுபடுத்தி மத்திய சிறையை அமைக்கலாமா என்பதையும் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இராயபுரம் தொகுதியில் இரும்புத் துகள்களினால் பாதிப்பு.

***9528—திரு. இரா. மதிவாணன் :**

மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை துறைமுகத்தில் கப்பல்களில் இருந்து கன்வேயர் பெல்ட் மூலமாக இரும்புத்துகள் மற்றும் கற்கள் இறக்குமதி செய்யப்படும் காரணத்தால், அங்கிருந்து கிளம்பும் இரும்புத்

1991 சனவரி 23]

துகள்கள் இராயபுரம் தொகுதியில் பல்வேறு பகுதிகளில் காற்றில் பரவி, பொதுமக்களின் உடல் நலத்தையும், உடைமைகளையும் (வீடு உட்பட) பெருமளவு பாதிப்புக்கு உள்ளாக்குவதனை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, வருடத்தில் சனவரி, பிப்ரவரி, மார்ச்சு ஆகிய மாதங்களில் கரையை நோக்கி வீசும் காற்றினால் சென்னைத் துறைமுகத்தில் இரும்புத்தாது கையாளப்படும்போது தூசு பரவுகின்றது. இதை தடுப்பதற்குப் போதிய நடவடிக்கைகளை சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகம் எடுத்து வருகின்றது.

திரு. இரா. மதிவாணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இரும்புத் தூள்கள், தொகுதியிலே பல பகுதிகளிலே பரவுவதால், பொது மக்கள் இருதய நோயால் அதிகம் பாதிக்கப்படுவதற்கு வாய்ப்பு உள்ளது. ஆகையினால் அந்த இரும்புத் தூள்களை இறக்குமதி செய்யப்படும் இடத்தை மாற்றுவதற்குச் சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் அரசு கலந்து பேச ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, தற்போது ஏற்படக் கூடிய கெடுதலைத் தடுக்கின்ற வகையில் பல முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு மாசு கட்டுப் பாட்டு வாரியத்தோடு கலந்தாலோசிக்கப்பட்டு, தூசு பரவாமல் தடுப்பதற்குத் தகுந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருந்தாலும் உறுப்பினரவர்கள் சொன்ன கருத்தைப் போல, வட சென்னையில் அனல் மின்சார நிலையத்தின் நிலக் கரித் தேவையைப் பூர்த்தி செய்ய, சென்னை துறைமுகத்தை எண்ணூர் வரையில் விரிவாக்கும் திட்டம் எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் நிறைவேற்றப்படலாம். அப்படி நிறைவேற்றப்படு கின்றபொழுது, இந்தப் பணி அந்தப் பகுதிக்கு மாற்றப்படும் பொழுது நிச்சயமாக இந்த இரும்புத் தாது மற்றும் கற்களைக் கையாளப்படுவதில் தூசு பரவாமல் இருக்கத் தேவையான ஏற் பாடுகளைச் செய்யலாம்.

பேருந்துகளில் இலவசப் பயணம்.

10311—**திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் :**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு மோட்டார் வாகன பராமரிப்புத் துறை தொழிலாளர்கள் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்படுமா ?